DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SANKARANKOVIL.

| | | |
|---|---|---|
| Calender | --- | |
| Miscellaneous | --- | S.T.C. No. 131/2016 |
| Preliminary Register | --- | |
| Sessions | --- | PW1 |
| Deposition of witness for | | Prosecution<br>Defence<br>Case |

Name : நாராயணசாமி
Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the previsions of Act X of 1873 of the day of

03.01.2023.

<u>எதிர் மனுதாரர்தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>

எதிரிக்கு சொந்தமான மில் 2015 ஆம்ஆண்டு அக்டோபர் மாதத்திற்கு பின்னர் இயங்கவில்லை என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 2015 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்கு முன்பு நிலுவைத்தொகை கேட்டு நான் எதிரிக்கு கடிதம் கொடுத்தேன் என்று சொன்னால் கொடுக்கவில்லை. 2015 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் எதிரிக்கும் எனக்கும் வண்டி வாடகை சம்பந்தமாக பண பாக்கி நிலுவையில் இருந்ததா என்றால் இல்லை. 2015 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் எனது மகன் என்னுடன் தான் இருந்தார் என்று சொன்னால் சரிதான். நான்

பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது மகன் என்னுடன் இருந்த காலகட்டத்தில் எனக்கு வியாபார ரீதியில் எனக்கு உதவியாக இருந்தார் என்றால் சரிதான். 30.09.2015 முடிய எனக்கு ரூபாய் 3,13,458 ம் அது போல் கரடிகுளம் கிராமத்திற்கு 30 நாட்களும் அழகியபுரம் கிராமத்திற்கு 13 நாட்களும் வாகனம் ஓட்டியது சம்பந்தமாக பாக்கி ரூபாய் 50,000 மற்றும் ரூபாய் 20,000 அது போல் 01.10.2015 எதிரி ரூபாய் 25,000 வாங்கியதில் ரூபாய் 23,000 கொடுத்தது போக மீதி ரூபாய் 2000 ஆக மொத்தம் ரூபாய் 3,91, 458 எனக்கு எதிரி நிறுவனத்தில் இருந்த வேன் வாடகை பாக்கி நிலுவையில் இருந்தது என்று சொன்னால் இல்லை. என்னிடம் காட்டப்படும் 21.12.2015, 23.12.2015,30.12.2015 மற்றும் 31.12.2015 ஆகிய தேதியிட்டு என்னுடைய மகனால் எனது வாடகை பாக்கிக்காக பணம் பெற்றுக் கொண்டு பிறப்பித்து கொடுத்ததாக சொல்லப்படும் Voucher ல் உள்ள கையெழுத்து எனது மகனின் கையொப்பம் தானா எனக் கேட்டால் என் மகனின் கையொப்பம் இல்லை. எதிரி நிறுவனத்தில் இருந்து பணத்தை நான் பெறும் போது Voucher ல் கையொப்பம்செய்து பணம் பெறுவேனா அல்லது Voucher ல் கையொப்பம் செய்யாமலே பணம் பெறுவேனா என்றால் Voucher ல் கையொப்பம் செய்து தான் பணம் பெறுவேன். நான் எதிரியின் நிறுவனத்திற்கு எந்தெந்த பதிவெண் கொண்ட வாகனத்தை ஓட்டியுள்ளேன் என்று கேட்டால் TN 72 A 9414, TN 72 Z 2265, ஆகிய இரண்டு வண்டிகள் செல்லும், மற்றபடி சில நேரங்களில் மேற்படி இரண்டு வண்டிகள் பழுது ஆனால் மற்ற வண்டிகளையும் அனுப்புவோம். மேற்படி இரண்டு வண்டிக்கும் மோட்டார் வாகன சட்டப்படி வாகன நடைச்சீட்டு தயார்செய்யவேண்டும் என்றால் சரிதான். மேற்படி இரண்டு வண்டிகளுக்கும் தினமும் எத்தனை கி.மீ. சென்றது என்ற விவரத்தை வாகன நடைச்சீட்டு கட்டாயம் குறிக்க வேண்டும் என்று சொன்னால் குறிக்க வேண்டும், எதிரி நிறுவனத்தில் ஒவ்வொரு நடைக்கும் குறிப்பிட்ட வாடகையை நிரந்தரமாக நிர்ணயம் செய்து வைத்ததால் மேற்படி வாடகை பணத்தை எழுதியிருக்க வேண்டும். மேற்படி நடைச்சீட்டை பார்த்தால் எத்தனை நாள் வண்டி ஓடியுள்ள விபரம் தெரியவரும் என்றால் வண்டி நடைக்கு சென்றால் ஊர் பெயரை குறித்துக்கொள்வோம் மற்றபடி வாடகை பணம் குறித்து அதில் குறிக்க மாட்டோம். மேற்படி அந்த வாகன நடைச்சீட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நான் தயாரா என்றால் தற்போது அது என்னிடம் இல்லை. மேற்படி வாடகை நடைச்சீட்டை நான் தாக்கல் செய்தால் எனக்கு பாதமாக அமையும் என்பதால் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 31.12.2015 வரை எனக்கு எதிரி நிறுவனத்தில் இருந்து எனக்கு பணம் கொடுக்கப்பட்டு என்னிடமும் என் மகனிடமும் எதிரி நிறுவனத்தால் Voucher பெறப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு 30.09.2015 வரை ரூபாய் 3, 91, 458 வேன் வாடகை பாக்கியாக நிலுவைத்தொகை எதிரி நிறுவனத்தில் இருந்தது என்றும், 2015 அக்டோபர் மாதத்தில் எதிரி நிறுவனம் தற்காலிகமாக உற்பத்தி பணியை நிறுத்தியதால் வாடகை பாக்கிக்காக எதிரி நிறுவனத்திடமிருந்து செக்யூரிட்டிக்காக எனக்கு தாவா காசோலை தேதி குறிப்பிடமால் வழங்கப்பட்டிருந்தது என்றும், அந்த காசோலையை எதிரி நிறுவனத்தில் இருந்து வாடகை பாக்கி பணத்தை நான் பெற்றுக்கொண்டு மீண்டும் அதிகப்படியான பணத்தை வசூல் செய்ய வேண்டும் என்ற நோக்கில் தாவா காசோலையை உற்பத்தி செய்து வசூலுக்கு தாக்கல்

செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா காசோலைக்கு எதிரி நிறுவனத்தால் வசூலுக்கு தாக்கல்செய்த தேதியில் செலுத்த வேண்டிய கடப்பாடு (Liability) இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மகனுக்கு வங்கிக்கணக்கு உள்ளதா என்று கேட்டால் என் மகன் கல்லூரி படிக்கும் காலகட்டத்தில் வங்கிக்கணக்கு இருந்தது ஆனால் எந்த வங்கிக்கணக்கு என்று ஞாபகமில்லை. தற்போது எனது மகன் அர்ச்சனா எஜென்சி சங்கரன்கோவில் - புளியங்குடி சாலையில் உள்ள இந்தியன் ஆயில் பெட்ரோல் பல்க்கில் வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான். எனது மகனின் திருமணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை அருள்மிகு சங்கரநாராயணர்திருக்கோயிலில் பதியப்பட்டது. என் மகனுடைய கல்யாண தேதி 01.12.2019 ல் நடைபெற்றது. அந்த திருமணம் அருள்மிகு சங்கரநாராயணர்திருக்கோயிலில் பதியப்பட்டது. எனது மகனின் மனைவி பெயர் சுபா. எனக்கு வருமானவரிக்கணக்கு அட்டை உள்ளதா என்றால் உள்ளது. வருமானவரிக்கணக்கு அட்டை நகல் கேட்டால் ஆஜர் செய்யலாம். இந்த வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் எதிரி மீது சங்கரன்கோவில் துணைக்காவல் கண்காணிப்பாளரிடம் ஒரு புகார் அளித்தேனா என்றால் சரிதான். மேற்படி புகாரை நான் எதற்கு அளித்தேன் எனக் கேட்டால் எதிரி நிறுவனம் வாடகை பாக்கி தரவேண்டியதால் நான் புகார் அளித்தேன். மேற்படி புகாருக்கு எனக்கு சி.எஸ்ஆர். வழங்கப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி புகாரை நான் காவல் துறை துணை கண்காணிப்பாளரிடம் நேரிடையாக வழங்கினேன். மேற்படி புகாருக்கான விசாரணை 28.11.2016 ம் தேதி நடைபெற்றது என்று சொன்னால் அதைப்பற்றி எனக்க ஞாபகமில்லை. விசாரணையின் போது எதிரி 29.11.2016 ம் ஆண்டு மேற்படி பணம் சம்பந்தமாக நீதிமன்றத்தில் தாவா வழக்கு நிலுவையில் உள்ளது என்று எதிரி காவல் துறை துணை கண்காணிப்பாளருக்கு பதில் அனுப்பினார் என்று சொன்னால் இல்லை. மேற்படி மனு விசாரைணயில் என்னிடமோ எதிரியிடமோ எதுவும் எழுதி வாங்கவில்லை. மேற்படி விசாரணையின் போது எதிரி இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் தாவா வழக்கு நிலுவையில் உள்ளதால் சட்டப்படி காவல் துறை விசாரிக்கக்கூடாது என்று பதில் அனுப்பியதால் விசாரணை கைவிடப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் கொடுத்த புகாரில் எதிரி வாடகை பாக்கி பணத்தையும் தாவா வழக்கில் உள்ள பணத்தையும் தனித் தனியாக தரவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தேன் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு கரூர் வைஸ்யா வங்கி காசோலை 000203யை கொடுக்கவில்லை என்றும் அதை எதிரி பணம் மதீப்பீடு செய்து வங்கியின் மூலமாக பெற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி கரூர் வைஸ்யா வங்கியின் மூலமாக பணத்தை பெற்றுக்கொண்டார் என்பதை காட்டுவதற்கு நான் ஆவணங்களை வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். எனக்கு வரவேண்டிய வேன் வாடகை பணத்தை என் மகன் விக்னேஷ் மூலம் பெற்றுக்கொண்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

(எதிர் மனுதாரர் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)